சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது முழுவதுமாக குறிப்பிட்ட அளவிற்கு டிரீட்மென்ட் செய்ய முடியவில்லை என்றாலும் கூட ஒரு குறிப்பிட்ட சதவீதத்தில் டிரீட்மென்ட் செய்வதற்கு இண்டர்னல் பிளான்ட் போட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அது பற்றி மாசு கட்டுப்பாடு வாரியத்திலே சொல்லி நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 49

திரு. எஸ்.எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே அது வராது. தனியாகத்தான் போட வேண்டும். வினா எண் 49, திரு. எம். பெரியவீரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

49—

நகரப் பேருந்துவிட நடவடிக்கை.

*9056 — திரு. எம். பெரியவீரன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரிய குளம் தொகுதி, கொடைக்கானலில் நகரப் பேருந்துகளை புதிதாக விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உலக சுற்றுலா மையத்தின் ஒரு தலை சிறந்த நகரமாக இருக்கும் கொடைக்கானல் நகரப் பகுதியிலே பல கிராமங்களில் இருந்து வருகிற ஆயிரக் கணக்கான மக்களுக்கு நகரப் பேருந்து வசதி இல்லாமல் வெகுகாலமாக சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிடையாக வந்தபோது கூட மக்கள் அது பற்றி பெட்டிஷன் கொடுத்து நிறைவேற்

1992 செப்டம்பர் 23]

றித் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதி மக்களின் நன்மையைக் கருதி அமைச்சர் அவர்கள் நகரப் பேருந்து விட முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இயங்கப் படுகிற ஒரு நகரப் பேருந்துக்கு 41 சதவீதம் தான் அந்த பேருந்திலே பயணம் செய்கிறார்கள். ஆகவே புதிய பேருந்துகள்—நகர பேருந்துகள் விடுகின்ற வாய்ப்பு அங்கே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்றைக்கு அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்கின்றபோது புதிய பேருந்தாக அதை மாற்றித்தர வேண்டும் என்று சொன்ன உடனே இந்த அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு காலையிலேயே அந்த புதிய பேருந்தை இயக்கினோம் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. தேவையான அளவுக்கு புறநகர் பேருந்துகள் எவ்வளவு தேவையோ அவ்வளவு பேருந்துகளை கொடைக்கானல் பகுதிக்கு இப்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 50, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

50—

ஆரணி தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு நகரப் பேருந்து சரிவரச் செல்ல நடவடிக்கை.

*11512—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆரணி தொகுதியில் 1000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழும் கிராமங்கள் பலவற்றில் நகரப் பேருந்துகள் சரிவரச் செல்வதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?